## முறையான - முழுமையான கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு

# உரிய நிவாரணம் நிச்சயம் வழங்கப்படும்!

## விழுப்புரம் மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி !

விழுப்புரம், டிச. 4-

**கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களை முறையான - முழுமையான கணக்கெடுப்பு நடத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் நிச்சயம் வழங்கப்படும் என்று விழுப்புரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த பின் பேட்டியளிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய பின், விழுப்புரம் கிழக்கு, வி.வி.ஏ. மஹாலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

ஃபெஞ்சல் புயலின் காரணமாக தமிழ்நாடு பரவலாக கடுமையான மழைப்பொழிவை சந்தித்து வருகின்றது. குறிப்பாக, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணா மலை, கடலூர் ஆகிய மாவட்டங்கள் இதுவரை கண்டிராத மழையை சந்திக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு தினங்களாக மழை தொடர்ந்து பெய்து கொண்டு வருகிறது. இவையல்லாமல், மற்ற மாவட்டங்களிலும் மழையின் அளவு வழக்கத்தை விட அதிகமாக பதிவாகி உள்ளது.

**முன்கூட்டியே உரிய நடவடிக்கை!**

இந்தப் புயல் தொடங்குவதற்கு முன்பாகவே அரசின் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்காக பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி உரிய நடவடிக்கையை முன்கூட்டியே மேற்கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

அதேபோல, அமைச்சர் பெருமக்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நாங்கள் தொடர்பு கொண்டு, இந்த விபரங்களை எல்லாம் தெரிவித்துக் கொண்டிருந்தோம். அதேபோல, காணொலி மூலமாகவும் அவர்களை தொடர்பு கொண்டு ஆய்வுக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மீட்புப் பணிக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**3 மாவட்டங்களுக்கு 493 மீட்புக் குழு வீரர்கள்!**

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்திற்கு, சுமார் 407 வீரர்களை உள்ளடக்கிய 7 தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுக்களும், 8 மாநில பேரிடர் மேலாண்மைக் குழுக்களும் என மொத்தம் 15 குழுக்களும், கடலூர் மாவட்டத்திற்கு 56 வீரர்களைக் கொண்ட 2 குழுக்களும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 30 வீரர்களைக் கொண்ட ஒரு குழுவும், ஆக மொத்தம் மூன்று மாவட்டங்களுக்கும் 493 மீட்புக் குழு வீரர்கள், 18 குழுக்களாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிக் குழுவினருடன், மாநிலத்தின் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையைச் சேர்ந்த வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்தில் 180, கடலூர் மாவட்டத்தில் 247 மற்றும் திருவண்ணா மலை மாவட்டத்தில் 210 என மொத்தம் 637 தீயணைப்புத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். புயல், மழையிலிருந்து பாதுகாப்பாக பொது மக்களைத் தங்க வைக்க தற்போது 174 நிவாரண மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 7 ஆயிரத்து 876 நபர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, உணவு, மருத்துவ வசதிகள் தொடர்ந்து செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**உடனுக்குடன் மின் இணைப்பு!**

விழுப்புரம் மாவட்டம் பெரும் பாதிப்படைந்து மின்சாரம் இன்றி பல பகுதிகள், பல கிராமங்கள், பேரூராட்சிகள் சிக்கல்களை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதையும் சரி செய்வதற்கான 900 நபர்கள் அந்தப் பணியில் இன்றைக்கு மின்வாரியத் துறையின் சார்பாக ஈடுபட்டிருக்கிறார்கள். தண்ணீர் தேங்கியிருக்கும் இடங்களில் எல்லாம் உடனடியாக மின்சாரம் தர முடியாத சூழ்நிலை இருக்கிறது. தண்ணீர் வடிந்த பகுதிகளில் எல்லாம் உடனுக்குடன் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மழையின் அளவு கடலோர மாவட்டங்களில் குறைந்திருந்தாலும், உள்மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர் அன்சுல் மிஸ்ரா அவர்கள் தலைமையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்த ஒரு சிறப்புக் குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பயிர் சேதங்களைப் பொறுத்தவரையில், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் நெற்பயிர்கள் மூழ்கியிருக்கிறது.

**1,29,000 ஹெக்டேர் பயிர் சேதம்!**

தற்போதைய உத்தேசமான கணக்கெடுப்பின்படி, 1,29,000 ஹெக்டேர் பரப்பளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிவரம் பெறப்பட்டுள்ளது. மழை முழுவதுமாக நின்ற பிறகு, தேங்கியுள்ள நீர் வடிந்தபின், முறையான, முழுமையான கணக்கெடுப்பு நடத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் நிச்சயமாக வழங்கப்படும்.

அதேபோல் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய நம்முடைய களப் பணியாளர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புயலின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், சேதமடைந்த வீடுகள் மற்றும் கால்நடைகளுக்கும் உரிய நிவாரணமும் வழங்கப்படுகிறது. துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள், பேரிடர் மீட்புக் குழுவினர் மற்றும் அனைத்து அரசுத் துறை அலுவலர்களும் முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நானும், சென்னையில் கள ஆய்வுகளையும், ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தியதோடு, தற்போது இங்கு வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை ஓரளவிற்கு பார்வையிட்டு வந்திருக்கிறேன்; ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறேன்.

வரும் வழியிலேயே தற்போது கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களின் பொறுப்பு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அங்குள்ள நிலவரங்களை நான் ஓரளவு கேட்டறிந்திருக்கிறேன்.

**பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுக்க நடவடிக்கை!**

பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக பாதிப்பிலிருந்து மீட்டு, இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவருவதற்கான பணிகளை உடனடியாக செய்திட வேண்டுமென்று அவர்களுக்கு நான் அறிவுறுத்தி இருக்கிறேன்.

நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, ஃபெஞ்சல் புயலின் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றினை விரைவில் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்து, சேதங்களைப் பார்வையிட உடனடியாக குழுவினை அனுப்பி வைப்பதற்கான அந்தக் கோரிக்கையையும் நிச்சயமாக தமிழ்நாடு அரசின் சார்பில் நாங்கள் வைக்க இருக்கிறோம்.

**செய்தியாளர் :** ஒன்றிய அரசின் மீது நம்பிக்கை இருக்கிறதா? தூத்துக்குடி மழை வெள்ளத்தின் போது ஏற்பட்ட பாதிப்புகளுக்கு கேட்ட தொகை வழங்கவில்லை. தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதா? கடுமையான பாதிப்புகளை தமிழ்நாடு சந்திந்திருக்கிறதே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நம்பிக்கையோடுதான் அனுப்புகிறோம். அதையும் எப்படி சமாளிப்பது என்பதை பிறகு நாங்கள் முடிவு செய்கிறோம்.

**நாடாளுமன்றத்தில் - தி.மு.க. எம்.பி.க்களை பேசவிடவில்லை!**

**செய்தியாளர் :** நாடாளுமன்றத்தில் இன்றைக்கு தி.மு.க. எம்.பி.க்கள் புயல் பாதிப்பை பற்றி பேசவிடவில்லையே. அப்படி இருக்கும்போது நம்முடைய கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்ளுமா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பேச விடவில்லை. முறைப்படி இது எங்களுடைய கடமை. எவ்வளவு சேதாரம் ஏற்பட்டிருக்கிறது; மக்கள் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையில் எப்படிப்பட்ட பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது. இவற்றையெல்லாம் கணக்கெடுத்து அனுப்புவது எங்களுடைய கடமை. அதைச் செய்வது அவர்களுடைய கடமை. ஆனால் அதை செய்ய ஒவ்வொரு முறையும் மறுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும், அதையும் மீறி நாங்கள் செய்து கொண்டுதான் இருக்கிறோம். பார்ப்போம்.

**செய்தியாளர் :** முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் கடுமையாக குற்றச்சாட்டை முன் வைத்திருக்கிறார். நாங்கள் எல்லாம் எங்கள் ஆட்சியில் பயிர்களுக்கெல்லாம் வருடத்திற்கு இரட்டை இழப்பீடு கொடுத்தோம். ஆனால், தி.மு.க. அரசு காலம் தாழ்த்தி வழங்குகிறது என்று கூறி இருக்கிறார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அவர் எதிர்க்கட்சித் தலைவர், குற்றம் சொல்வதுதான் அவருடைய கடமை. அதைப்பற்றி நாங்கள் என்றைக்கும் கவலைப்பட்டது கிடையாது. இருந்தாலும் நான் சொல்கிறேன். மக்களுக்கு தெளிவாக தெரியும். எந்த ஆட்சியில் மக்களுக்குரிய பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று நன்றாக தெரியும்.

**செய்தியாளர் :**

திருவண்ணமலையில் மண் சரிவு காரணமாக 3 வீட்டில் ஏழு பேர் சிக்கியிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பேசிக் கொண்டுதான் வருகிறேன். ஐ.ஐ.டி.லிருந்து சில பொறியாளர்களை வரவழைத்து அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது. தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

**படகுகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள்!**

**செய்தியாளர்:** விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் தண்ணீரில் முழ்கியிருக்கிறது. அவர்களுக்கு அத்தியாவசியமான உணவு, குடிநீர் தேவைப்படுகிறது. அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. படகுகள் எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக கொண்டு போய் சேர்க்கப்படுகிறது.

**செய்தியாளர்:** 50 செ.மீ. மழை பதிவாகியிருக்கிறது. வானிலை மையத்தின் அறிவிப்பு நமக்கு சரியான முறையில் இருந்ததா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஓரளவு இருந்தது.

**செய்தியாளர் :** அடுத்த மாவட்டத்திற்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புள்ளதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தேவையில்லை. அங்கெல்லாம் மழை பெய்து பாதிப்பு அதிகம் இல்லை. விழுப்புரம், கடலூர், சென்னை, சென்னையை ஒட்டியுள்ள சில இடங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இப்போது கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் கடுமையான மழை பெய்து வருகிறது என்ற தகவல் வந்தது. உடனடியாக துணை முதலமைச்சருக்கு தொலைபேசியில் பேசி அவரை உடனடியாக போகச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், பொறுப்பு அமைச்சர்கள் அருகிலுள்ள மாவட்ட அமைச்சர்களையும் உடனடியாக அங்கு சென்று நிவாரண பணிகளை மேற்கொள்ள சொல்லியிருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

## செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில்

# கனமழை பாதிப்பு - கள ஆய்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## காணொலி மூலம் கடலூர் பணிகளையும் ஆய்வு செய்தார்!

விழுப்புரம், டிச.4-

**செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை ஆய்வு செய்து உரிய நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்மாவட்டங்களின் பல்வேறு இடங்களுக்குச் சென்று நேற்று முன்தினம் கள ஆய்வு மேற்கொண்டார்.**

**கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகள் குறித்து, காணொலி மூலம் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களை தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வங்கக் கடலில் உருவான “ஃபெஞ்சல் புயல்” காரணமாக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததைத் தொடர்ந்து, உடனடியாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழை எச்சரிக்கை காரணமாக மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். மேலும், சென்னையில் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டு, நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (2.12.2024) விழுப்புரம் மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஃபெஞ்சல் புயல் காரணமாக தொடர் கனமழையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள்!**

விழுப்புரம் மாவட்டம் முழுவதும் 65 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு 3617 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, நாளொன்றுக்கு 11,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது. கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக 15 பேரிடர் மீட்புக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூரில், பேரிடர் மீட்புப் படை வீரர்கள் ரப்பர் படகுகள் மூலம் வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் இருக்கும் மக்களுக்கு உணவு பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி, நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்துத் துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

**செங்கல்பட்டு மாவட்டம், இடைக் கழி நாடு பகுதியில் மின்கம்பங்கள் அமைத்திடும் பணிகள் ஆய்வு!**

விழுப்புரம் மாவட்டத்திற்குச் செல்லும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் செங்கல்பட்டு மாவட்டம், இடைக்கழிநாடு பகுதியில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் மின்கம்பங்கள் வீழ்ந்ததையொட்டி, மின்கம்பங்கள் அமைத்திடும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**விழுப்புரம் மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம்மண்டவாய் புதுக்குப்பம் பகுதியில் உள்ள பேரிடர் கால பல்நோக்கு பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 100 நபர்களுக்கு வேட்டி, சேலைகள், அரிசி, உணவு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். மேலும், வீடுகள் சேதமடைந்து பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார். அதைத்தொடர்ந்து அப்பாதுகாப்பு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமில் மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து, மரக்காணம் விருந்தினர் மாளிகையில், விழுப்புரம் மாவட்டத்தில் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்த புகைப்படக் காட்சியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவரங்கள் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், ஃபெஞ்சல் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட 100 நபர்களுக்கு வேட்டி, சேலை, உணவுப் பொருட்களையும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு நிவாரண உதவிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும், விழுப்புரம் கிழக்கு, பாண்டி ரோட்டில் உள்ள திருமண மண்டபத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட 500 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வேட்டி, சேலை, உணவுப் பொருட்களையும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார்.

பின்னர், காணை ஊராட்சி ஒன்றிய பகுதியில் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, சேத விவரங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள அரகண்டநல்லூருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படை வீரர்கள் ரப்பர் படகுகள் மூலம் வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் இருக்கும் மக்களுக்கு உணவு பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், திண்டிவனத்தில் உள்ள திருமண மண்டபத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட 2000 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேட்டி, சேலை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிலைமையைச் சீர்செய்ய நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள்; அத்தியாவசியச் சேவைகளை மீட்டெடுத்து வரும் மின்சாரத் துறை பணியாளர்கள், நெடுஞ்சாலைத்துறை, மருத்துவத் துறை, முக்கியமாகப் பேரிடர் மீட்புப் படைப் பிரிவினர், தீயணைப்புத் துறையினர், காவல் துறையினர் உள்ளிட்ட அனைவருக்கும் தன்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ். மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்து துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.